**புதுச்சேரி அரசு**
**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை**
**புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமம்**
**சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்டம்**

**சான்றிதழ் படிப்பு: சூரிய நிறுவன உதவி மேலாளர்**

மத்திய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் கீழ், பசுமை திறன் மேம்பாட்டு திட்டத்தை (GSDP) நமது பாரத பிரதமர் அவர்களால், 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். இந்த திட்டம், இந்திய இளைஞர்களுக்கு அறிவு திறனை ஊக்குவிக்கவும் மற்றும் தன்னார்வ வேலை வாய்ப்பை வழங்குவதற்கான ஓர் முயற்சியாகும். இந்த திட்டம், தொழில்நுட்ப அறிவு, மற்றும் நீடித்த மேம்பாட்டுடன் கூடிய பசுமை திறன் கொண்ட தொழிலாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழமத்தின் (PPCC) கீழ் செயல்படும் புதுச்சேரி சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும், வாழ்வாதார திட்டத்தின் (EIACP) கீழ், ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பசுமை திறன் மேம்பாட்டு திட்டத்திற்கான (GSDP) பயிற்சிகளை நடத்திவருகிறது. இந்த ஆண்டு, **08.01.2025** முதல் **சூரிய நிறுவன உதவி மேலாளர்** பயிற்சியை அனுபவம் வாய்ந்த அறிவியல் வல்லுநர்கள் மூலம் நடத்தப்பட இருக்கிறது.

இதில் பங்கேற்கும், புதுச்சேரி பகுதியைத் தவிர பிற பகுதிகளிலிருந்து வரும் விண்ணப்பதாரர்களுக்கு தங்கும் வசதி மற்றும் உணவும் இலவசமாக வழங்கப்படும். இந்தப் பாடநெறிக்கான சேர்க்கை, நேர்முகத் தேர்வு முறையைப் பொறுத்தே இருக்கும். இந்த பயிற்சி வகுப்பிற்கு எந்த வித கட்டணமும் இல்லை.

விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் Google Form இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம்: https://forms.gle/3uXYuQLniwcpQYRu8

**கல்வி தகுதி**: UG / டிப்ளமோ / 12 + 2 ஆண்டு டிப்ளமோ அல்லது 10 + 3 ஆண்டு டிப்ளமோ மற்றும் 1 ஆண்டு அனுபவம் அல்லது NSQF நிலை 4 இல் முந்தைய தொடர்புடைய தகுதி மற்றும் 3 ஆண்டுகள் சம்பந்தப்பட்ட அனுபவம்.
**வயது வரம்பு**: 18 அல்லது அதற்கு மேல்.
**விண்ணப்பிக்கும் தேதி**: 13.12.2024 **விண்ணப்பிக்க கடைசி தேதி**: 02.01.2025.
**பாடநெறியின் கால அளவு**: 64 நாட்கள்; **இடங்கள் எண்ணிக்கை**: 30 (முப்பது).
**இடம்**: டாக்டர் அப்துல்கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம், லாஸ்பேட்டை, புதுச்சேரி.

**மேலும் தகவலுக்கு**: 0413 – 2201256 என்ற தொலைபேசி எண்ணை காலை 10.00 முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளவும் அல்லது envis@py.gov.in / envispdy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

***